# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 342 | 4 Pages | 4.7.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 342 | 4 பக்கங்கள் | 4.7.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஹத்ராஸ் சம்பவம்; 116 பேர் பலியானதில் சதி செயலா...? யோகி ஆதித்யநாத் பதில்



லக்னோ, ஜூலை 4

உத்தர பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள புல்ராய் கிராமத்தில் போலே பாபா என்ற இந்து மத போதகரின் சத்சங்கம் நிகழ்ச்சி ஒன்று நேற்று நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் போது, மதபோதகர் போலே பாபா மேடையில் கீழே இறங்கி வந்தபோது, மக்கள் ஒருவரையொருவர் முண்டியடித்து கொண்டு, அவரை நோக்கி முன்னே சென்றனர்.

இதில், கடுமையான நெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசல் சம்பவத்தில் சிக்கி, பலர் ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர். இதனால், குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் என பலர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 18 பேர் காயமடைந்து உள்ளனர்.

அவர்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து பலர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 116 ஆக உயர்ந்தது. மேலும் சிலருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், உத்தர பிரதேச முதல்மந்திரி யோகி ஆதித்யநாத் செய்தியாளர்களை சந்தித்து பேசும்போது, இது விபத்தோ அல்லது சதி திட்ட செயலோ எதுவாக இருப்பினும், அதன் அடிமட்டம் வரை அரசு ஆராய்ந்து செயல்பட்டு, இதற்கு பொறுப்பான நபர்களுக்கு சரியான தண்டனை வழங்கப்படும் என கூறினார்.

பிரதமர் மோடி மற்றும் உள்துறை மந்திரி அமித்ஷா இருவரும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து உள்ளனர். மத்திய அரசு மற்றும் மாநில அரசு, சம்பவத்தில் உயிரிழந்த நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும் எனஅறிவித்துஉள்ளது.இதுபோன்றசம்பவத்தில்,இரங்கல்தெரிவிப்பதற்கு பதிலாக, அரசியல் செய்வது என்பது துரதிர்ஷ்டவசம் மற்றும் கண்டனத்திற்குரியது என்று அவர் கூறியுள்ளார். இந்த சம்பவம் பற்றி விசாரிக்கஆக்ராநகரகூடுதல்டி.ஜி.தலைமையில்ஒருகுழுஅமைக்கப்பட்டு உள்ளது. இதுபற்றிய விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும்படியும் கேட்டு கொள்ளப்பட்டு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேபோன்று, தலைமை செயலாளர் மற்றும் டி.ஜி.பி. ஆகியோரும் சம்பவ பகுதிக்கு சென்றிருக்கின்றனர். சவுத்ரி லட்சுமி நாராயண், சந்தீப் சிங், அசீம் அருண் ஆகிய 3 மந்திரிகளும் அந்த பகுதிக்கு சென்றுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

# உ.பி.யில் கூட்ட நெரிசலில் சிக்கி ஏராளமான பக்தர்கள் பலியான சம்பவம்: முதல்வர் இரங்கல்

சென்னை, ஜூலை 4

உத்தர பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள புல்ராய் கிராமத்தில் இன்று இந்து மத சத்சங்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சி முடிந்து மக்கள் புறப்பட்டபோது கடும் நெரிசல் ஏற்பட்டது. ஒருவரையொருவர் முண்டியடித்து சென்றபோது பலர் கீழே விழுந்தனர். நெரிசலில் சிக்கி இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் ஏராளமானோர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து பலர் உயிரிழந்து வருகின்றனர். சிலருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இந்நிலையில் கூட்ட நெரிசலில் சிக்கி ஏராளமான பக்தர்கள் பலியானசம்பவத்திற்குமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "உத்தரபிரதேச மாநிலம் ஹத்ராஸ் பகுதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் துயரம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விழைகிறேன். இந்த இக்கட்டான நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுடன் நாங்கள் நிற்கிறோம்"என்றுஅதில்முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## நீட் தேர்வு குறித்த விஜய் கருத்தை காங்கிரஸ் வரவேற்கிறது: செல்வப்பெருந்தகை

சென்னை, ஜூலை 4

10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவமாணவிகளுக்கு பரிசுகளை வழங்குகிறார். முதற்கட்டமாக, கடந்த 28 ம் தேதி திருவான்மியூரில் மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. 21 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகையை விஜய் வழங்கினார். 2ம் கட்டமாக இன்று தமிழக வெற்றிக் கழகத்தின் கல்வி விருது வழங்கும் விழா சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது. செங்கல்பட்டு, சென்னை, கடலூர், கள்ளக்குறிச்சி, உள்ளிட்ட 17 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விஜய் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகையை வழங்கி வருகிறார். இந்த நிகழ்ச்சியில் நீட் தேர்வு குறித்து விஜய் பேசியதாவது; நீட் தேர்வால் பல்வேறு மாணவ , மாணவிகள் பாதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாநிலங்களுக்கு ஏற்றவாறு பாடத்திட்டங்கள் இருக்க வேண்டும். நீட் தேர்வு மாநில உரிமைகளுக்கு எதிரானது. மாநில கல்வியில் பயின்றுவிட்டு தேசிய கல்வியில் தேர்வு எழுத சொல்வது அநீதி. நீட் தேர்வில் உள்ள மூன்று பிரச்சனைகள் என்னவென்றால் மாநில உரிமைக்கு எதிராக உள்ளது. நீட் தேர்வு விலக்கு கோரி தமிழக சட்டப்பேரவை கொண்டு வந்துள்ள தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். காலதாமதம் செய்யாமல் மத்திய அரசு தமிழகத்தின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். நிரந்தர தீர்வாக பொதுப்பட்டியலில் இருந்து கல்வியை நீக்கி மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரவேண்டும். மாநில அரசுக்கு கல்வி, சுகாதாரத்தில் முழு சுதந்திரத்தை தர வேண்டும். என கூறினார்.

இந்த நிலையில் நீட் தேர்வு குறித்த தவெக தலைவர் விஜய் பேச்சு குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "மாணவ செல்வங்களின் எதிர்காலத்தை சிதைக்கும் நீட் தேர்வு ரத்து செய்யப்பட வேண்டும் என்ற மக்கள் தலைவர் ராகுல் காந்தியின் கூற்றை பிரதிபலித்த தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்யின் கருத்தை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வரவேற்கிறது. தமிழக மக்களின் நலனில் அக்கறையுள்ள அனைத்து கட்சிகளும் ஒரு அணியிலும் பாசிச பாஜக மட்டும் தனியாக உள்ளதையும் மக்கள் நன்கு அறிந்து விரைவில் பாஜகவிற்கு தக்க பாடம் புகட்டுவார்கள்" என்று தெரிவித்துள்ளார்.




# அடுத்த வாரம் திருமணம்... மணப்பெண் தூக்குப்போட்டு தற்கொலை.. கிணற்றில் குதித்த காதலன்



வேலூர், ஜூலை 4

வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் அன்பு, அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருக்கு ஒரு மகள், 2 மகன்கள். மகள் இந்துபிரியா (வயது 25), பி.ஏ., பி.எட். படித்துள்ளார். அதே கிராமத்தைச் சேர்ந்த பாண்டியன் மகன் மணிமேகன் (27), எம்.ஏ., பி.எட். படித்துள்ளார். இருவரும் காதலித்து வந்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து இருதரப்பு பெற்றோர் சம்மதத்தின் பேரில் வருகிற 10ந் தேதி இருவருக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டது. அன்று காலையில் பள்ளிகொண்டா ரங்கநாதர் கோவிலில் திருமணமும், மாலையில் பாக்கம் கிராமம் அருகே உள்ள திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்ச்சியும் நடத்த முடிவு செய்யப்பட்டு திருமண பத்திரிகை அச்சடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மணமக்களின் பெற்றோர்கள் திருமண பத்திரிகையை உறவினர்களுக்கு வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை வீட்டில் இருந்த இந்துபிரியா திடீரென தனது வீட்டின் அருகே உள்ள தோட்டத்து பக்கம் சென்று வருவதாக வீட்டில் உள்ளவர்களிடம் தெரிவித்துவிட்டு சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் வீட்டிற்கு வரவில்லை. இதனையடுத்து பெற்றோர் தோட்டத்து பக்கம் சென்று பார்த்த போது அருகில் உள்ள வயலில் உள்ள மரத்தில் துப்பட்டாவால் அவர் தூக்கிட்ட நிலையில் இறந்து கிடந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்து விரைந்து வந்த மணிமேகன் தன் காதலி தற்கொலை செய்து கொண்டதை பார்த்ததும் வாழ்வதைவிட சாவதே மேல் என கூறி, அருகில் உள்ள கிணற்றில் குதித்தார். இதனை கண்ட அக்கம்பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் உடனடியாக கிணற்றில் குதித்து மணிமேகனை உயிருடன் மீட்டனர். இந்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த தற்கொலை சம்பவம் குறித்து பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் வெங்கடாஜலபதி பரதராமி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் கே.வி.குப்பம் போலீஸ் இன்ஸ்பெக்டர் நிர்மலா, பரதராமி சப் இன்ஸ்பெக்டர் செல்வகுமார் உள்ளிட்ட போலீசார் பாக்கம் கிராமத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர்.

மேலும் இந்துபிரியாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிவு செய்து இந்துபிரியா தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமணம் நடைபெற ஒரு வாரமே இருந்த நிலையில் மணப்பெண் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தி உள்ளது.

# கணவர் வெளிநாட்டில் வேலை... மனைவி வேறொருவருடன் உல்லாசம்... அடுத்து நடந்த பரபரப்பு

கோவை, ஜூலை 4

கோவை தெற்கு உக்கடம் பகுதியை சேர்ந்தவர் 25 வயது இளம்பெண். இவருக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். இளம்பெண்ணின் கணவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். இந்த நிலையில் இளம்பெண்ணுக்கு, அதே பகுதியை சேர்ந்த முகமது பிலால் (27) என்பவர் அறிமுகமானார். இவர் கோவையில் உள்ள காய்கறி மார்க்கெட் ஒன்றில் வியாபாரம் செய்து வந்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு முகமது பிலால் இளம்பெண்ணின் செல்போன் நம்பரை வாங்கி அவருடன் அடிக்கடி பேசி வந்தார். இதனால் வழக்கமான பழக்கம், நாளடைவில் இருவரும் நெருங்கி பழகும் அளவிற்கு வந்தது. இந்த சந்தர்ப்பம் எப்போது என காத்திருந்து பயன்படுத்தி தனது வக்கிரபுத்திக்கு வலைவீசி உள்ளார். வஞ்சமில்லாமல் நெஞ்சத்தை பறிகொடுத்த அந்த பெண்ணும் வலையில் வீழ்ந்தார். இதனால் முகமது பிலால் இளம் பெண்ணுடன் உல்லாசம் அனுபவித்துள்ளார்.

அத்துடன் அவர் நிறுத்தவில்லை. தன்னுடன் தொடர்ந்து உல்லாசமாக இருக்காவிட்டால், கணவர் மற்றும் உறவினர்களிடம் கூறிவிடப்போவதாக தொல்லை கொடுத்து, மிரட்டி வந்ததால் இளம் பெண்ணுக்கு என்ன செய்வதுஎன்றுதெரியவில்லை. விதிவசத்தால் விழுந்துவிட்டோம்...தற்போது விட்டுவிட முடிவு செய்து விட்டோம். அதன் பின்னரும் ஏன் இந்த மிரட்டல் என்று சொல்ல முடியாத வேதனையில் தவித்துள்ளார்.

அவரது போக்குக்கு முடிவு கட்ட வேண்டும் என்று, அவர் செல்போனில் பேசும்போது தவிர்த்து விடுவாராம். இந்த நிலையில் சம்பவத்தன்று இளம்பெண் அந்த பகுதியில் உள்ள கடைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த முகமது பிலால் இளம் பெண்ணிடம் தகராறில் ஈடுபட்டார்.

வாக்குவாதம் முற்றவே ஆத்திரம் அடைந்த நபர் இளம்பெண்ணை தகாத வார்த்தைகளால் திட்டி விட்டு,அவருக்குகொலை மிரட்டல் விடுத்துள்ளார். பின்னர் அங்கிருந்து சென்று விட்டார். இதனை இளம்பெண்ணால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கவலை அவளை, மூழ்கடிக்க தொடங்கியது. இதுதொடர்பாக இளம்பெண் உக்கடம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன் பேரில் இன்ஸ்பெக்டர் கலைவாணி, சப் இன்ஸ்பெக்டர் ரேணுகா தேவி ஆகியோர் முகமது பிலால் மீது 4 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி ஜெயிலில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# உண்டியல் காணிக்கை எண்ணும்போது ரூ.1 லட்சம் திருடிய பெண் ஊழியர்கள்... திருத்தணி முருகன் கோவிலில் பரபரப்பு

திருத்தணி, ஜூலை4

திருத்தணி முருகன் கோவிலுக்கு நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து மூலவர் முருகப்பெருமானை தரிசனம் செய்கின்றனர். பின்னர் தங்களது நேர்த்திகடனாக பக்தர்கள் மலைக்கோவிலில் உள்ள உண்டியலில் பணம், தங்கம், வெள்ளி போன்றவற்றை காணிக்கையாக செலுத்தி விட்டு செல்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த மாதம் பக்தர்கள் செலுத்திய உண்டியல் காணிக்கையை கோவில் இணை ஆணையர் (பொறுப்பு) அருணாச்சலம், அறங்காவலர்கள் சுரேஷ்பாபு, நாகன், மோகனன் ஆகியோர் முன்னிலையில் நேற்று எண்ணப்பட்டது.



உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்த கோவில் பெண் ஊழியர்கள் 2 பேர் பணத்தை திருடுவது கண்காணிப்பு கேமரா மூலம் கண்டறியப்பட்டது. இது குறித்து முருகன் கோவில் நிர்வாகம் திருத்தணி போலீசாருக்கு தகவல் தெரிவித்தது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் திருட்டில் ஈடுபட்ட 2 பெண் ஊழியர்களை தனி அறையில் வைத்து சோதனை செய்த போது, அவர்களிடமிருந்து ரூ.1 லட்சத்து 15 ஆயிரத்து 790ஐ பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் அவர்கள் ஆர்.கே.பேட்டை தாலுகா வீரமங்கலம் பகுதியை சேர்ந்த தேன்மொழி (வயது 35), நாகபூண்டி கிராமத்தை சேர்ந்த வைஜெயந்தி (44) ஆகியோர் என்பது தெரியவந்தது. தொடர்ந்து கோவில் இணை ஆணையர் கொடுத்த புகாரின் பேரில் திருத்தணி போலீசார் 2 பெண்களையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# மகள் காதலனுடன் ஓடி சென்று திருமணம்: கழிவறையில் கழுத்தை அறுத்து முன்னாள் கவுன்சிலர் தற்கொலை

குமரி, ஜூலை 4

நாகர்கோவில் அருகே ஆரல்வாய்மொழி வடக்கூர் கீழத்தெருவை சேர்ந்தவர் சுந்தர் (வயது 50). இவர் ஆரல்வாய்மொழி பேரூராட்சியின் முன்னாள் கவுன்சிலர். தற்போது சவுதி அரேபியாவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார்.

இவருக்கு ரூபா என்ற மனைவியும், ஒரு மகளும் உள்ளனர். அந்த பகுதியில் உள்ள ஒரு கல்லூரியில் பி.காம் 3ம் ஆண்டு படித்து வரும் சுந்தரின் மகள், வாலிபர் ஒருவரை காதலித்தார். இவர்களது காதல் விவகாரம் பெற்றோருக்கு தெரியவந்தது. இந்த காதலை பெற்றோர் எதிர்த்தனர். படிக்கிற வயதில் படிப்பு முக்கியம், இப்போது காதல் அவசியம் இல்லை என கண்டித்துள்ளனர்.

ஆனாலும் மகளால் காதலை தவிர்க்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி கடந்த 2 வாரங்களுக்கு முன்பு காதலனுடன் ஓடிச் சென்று கோவிலில் திருமணம் செய்து கொண்டார். இது பற்றி வெளிநாட்டில் இருந்த சுந்தருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை கேள்விபட்டு அதிர்ச்சி அடைந்த அவர் உடனே வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்கு திரும்பினார்.



தனதுஒரேமகள்தன்னை ஏமாற்றிவிட்டு ஓடி போய் காதல் திருமணம் செய்து விட்டாளே என சுந்தர் மனவேதனை அடைந்தார். இருப்பினும் மகளையும், மருமகனையும் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டார். ஆனாலும் அவர் யாரிடமும் மனம் விட்டு பேசுவதை தவிர்த்துள்ளார்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு சுந்தர் மாடியில் உள்ள கழிவறைக்கு செல்வதாக கூறி விட்டு சென்றுள்ளார். ஆனால் வெகுநேரமாகியும் அவர் திரும்பி வரவில்லை. இதில் சந்தேகமடைந்த அவரது மனைவி மாடிக்கு சென்று பார்த்தார். அப்போது கழிவறை கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. அதே சமயத்தில்உள்ளேஇருந்து முனகல் சத்தமும் கேட்டது. இதனால் பதற்றமடைந்த அவர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து பார்த்த போது கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் சுந்தர் ரத்த வெள்ளத்தில் கிடந்தார். அருகில் பிளேடு கிடந்தது. இதை பார்த்து துடிதுடித்து போன அவரது மனைவி கதறி அழுதார். பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஒருதனியார் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அங்கு பரிசோதித்த டாக்டர், சுந்தர் ஏற்கனேவே இறந்து விட்டதாக தெரிவித்தார். இதனை தொடர்ந்து அவரது உடல் பிரேத பாிசோதனைக்காக அனுப்பி வைக்கப் பட்டது.

கழிவறைக்கு சென்ற சுந்தர் கதவை உள்பக்கமாக பூட்டி விட்டு பிளேடால் கழுத்தை அறுத்து தற்கொலைசெய்ததுபோலீஸ் விசாரணையில் தெரியவந்தது. மேலும் இதுகுறித்த புகாரின் பேரில் ஆரல்வாய்மொழி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மகள் காதலனுடன் ஓடி சென்று திருமணம் செய்ததால் முன்னாள் கவுன்சிலர் கழுத்தை அறுத்து தற்கொலை செய்த சம்பவம் அந்தபகுதியில்சோகத்தை ஏற்படுத்தியது.

# விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 3 நாட்கள் பிரசாரம்

சென்னை, ஜூலை 4

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த நா.புகழேந்தி, கடந்த ஏப்ரல் மாதம் 6ந் தேதி உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார். அவர் மறைவுக்கு முன்பாக நாடாளுமன்ற தேர்தல் தேதியும் அறிவிக்கப்பட்டு விட்டதால், அந்த தேர்தலுடன் சேர்ந்து விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலை நடத்த முடியாமல் போனது.

இந்த நிலையில், விக்கிரவாண்டி தொகுதிக்கு வருகிற 10ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த தேர்தலை தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும், அக்கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள தே.மு.தி.க.வும் புறக்கணிப்பதாக அறிவித்துவிட்டன.

எனவே, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில், தி.மு.க., பா.ஜனதா கூட்டணியில் உள்ள பா.ம.க., நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் மட்டுமே போட்டியிடுவதால் அங்கு மும்முனை போட்டி நிலவுகிறது. தி.மு.க. வேட்பாளராக அன்னியூர்சிவா, பா.ம.க. வேட்பாளராக சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி வேட்பாளராக டாக்டர் அபிநயா ஆகியோர் களத்தில் உள்ளனர். ஆனால், இடையில் கடந்த மாதம் 20ந்தேதி முதல் 29ந்தேதி வரை தமிழக சட்டசபையும் கூடியதால், விக்கிரவாண்டி தொகுதியில் பிரசாரம் சூடுபிடிக்காமல் இருந்து வந்தது. தேர்தலுக்கு இன்னும் 7 நாட்களே இருக்கும் நிலையில், தற்போது அங்கு பிரசாரம் சூடுபிடித்துள்ளது.



அமைச்சர்கள் பலர் அங்கு முகாமிட்டு தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், கட்சியின் தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், அவரது மனைவி சவுமியா ஆகியோர் பா.ம.க. வேட்பாளருக்கு ஆதரவு திரட்டுகின்றனர். நாம் தமிழர் கட்சி வேட்பாளருக்கு அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்த நிலையில், தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக அக்கட்சியின் தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைஅமைச்சர்உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பிரசாரத்தில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரசாரத்தில் ஈடுபடுவது சந்தேகம் என்றும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மட்டும் வரும் 6, 7, 8 ஆகிய தேதிகளில், விக்கிரவாண்டி தொகுதியில் வேன் மூலம் வீதி வீதியாக சென்று பிரசாரத்தில் ஈடுபட இருப்பதாகவும் தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

# பள்ளி சிறுமி பாலியல் பலாத்காரம்: போக்சோ சட்டத்தில் 2 வாலிபர்கள் கைது

திருப்பூர், ஜூலை 4

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த அம்மாபட்டியை சேர்ந்தவர்கள்ஹரிகரன்(வயது19) யுவராஜ் (22). இவர்கள் இருவரும் 15 வயது பள்ளி சிறுமியைஆசைவார்த்தை கூறி பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனால் சிறுமியின் உடலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து பெற்றோர்கள் அவரை மருத்துவ பரிசோதனைக்கு அழைத்துச் சென்றனர். அப்போது சிறுமி 8 மாத கர்ப்பமாக இருந்ததாக தெரிகிறது.

இதுகுறித்துசிறுமியிடம் விசாரித்த போது தன்னை இருவர் பாலியல் பலாத்காரம் செய்ததாக தெரிவித்தார். அதன் பேரில் அவரது பெற்றோர்கள் உடுமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதைத் தொடர்ந்து வழக்குப்பதிவு செய்த போலீசார் ஹரிகரன், யுவராஜ் ஆகியோரை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இது குறித்து போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

# மதுரை மாவட்டம் விளாங்குடி பகுதியில் அமைந்துள்ள மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

மதுரை, ஜூலை 4

சர்வதேச சட்ட உரிமைகள் மற்றும் மனித நீதி சபை மற்றும் அனைத்து மகளிர் மேம்பாட்டு கழகம் இணைந்து மதுரைமாவட்டம்விளாங்குடி பகுதியில் அமைந்துள்ள மதுரை மேற்கு ஊராட்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் எல் கே ஜி,... யு கே ஜி சுமார் 50 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பேக், நோட், பென்சில், ஸ்கேல், ரப்பர் ஆகியவற்றை வழங்கப் பட்டது.. நமது அமைப்பில் பயணிக்கும் திரு எட்வர்ட் மற்றும் கிருஷ்ணன்



மூர்த்தி அவர்கள் பேக் நன்கொடையாக வழங்கினார்கள்.. அதேபோல் அமைப்பில் உள்ள அக்கா செல்வி. பாண்டீஸ்வரி அவர்கள் நன்கொடையாக நோட் மற்றும் எழுது பொருள்கள் வழங்கி உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் சர்வதேச சட்ட உரிமைகள் மற்றும் மனித நீதி சபை மதுரை மாவட்ட தலைவர் திரு சுரேஷ் பாபு , மாவட்ட செயலாளர் திரு ரவிச்சந்திரபாண்டியன், மற்றும் உறுப்பினர்கள் திரு. பாண்டி, திரு. மணிகண்டராஜா, மற்றும் அனைத்து மகளிர் மேம்பாட்டு கழக மாநில மகளிர் அணி தலைவி திருமதி மஞ்சுளா, மாநில இணைச்செயலாளர் திருமதி. செல்வி, மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. தங்கதுரை, மதுரை மாவட்ட மகளிர் அணி தலைவி திருமதி. விஜயலெக்ஷ்மி, துணை தலைவி திருமதி. மீனா குமாரி, திண்டுக்கல் மாவட்ட தலைவி திருமதி. விஜயலெக்ஷ்மி , நிர்வாகி திருமதி. அமுதா மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி சகாய பாத்திமா மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



விழுப்புரம் மாவட்டம்.கோலியனூர் ஒன்றியம். பூத்த மேடு, அரசு உயர்நிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம்.& ஜே.ஆர்.சி அமைப்பு இணைந்து உலக பிளாஸ்டிக் தவிர்ப்பு தினத்தை முன்னிட்டு மீண்டும் மஞ்சப்பை விழிப்புணர்வு பிரச்சாரம் தலைமையாசிரியர் S.M. முருகேசன் தலைமையில், நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக.மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர். N.நாகமுத்து. ஜூனியர் ரெட் கிராஸ் மாவட்டக் கன்வீனர் முனைவர் ம.பாபு செல்வதுரை ஆகியோர் கலந்துக்கொண்டு கருத்துரையாற்றினர். அத்துடன் அனைவருக்கு. மஞ்சப்பை ,நெகிழி தவிர்ப்பதற்கான துண்டு பிரசுரங்கள் வழங்கினர். சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் A.செல்வக்குமார். நன்றி கூறினார்

# அகழாய்வு பணியில் சோழர் கால நாணயம் கண்டெடுப்பு



கடலூர், ஜூலை 4

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் கீழடி, மருங்கூர் உள்பட 8 இடங்களில் அகழாய்வு பணிகள் கடந்த 18ந்தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. அந்த வகையில் கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த மருங்கூர் பகுதியில் 3 அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டு ஆய்வு நடந்து வருகிறது. இதில் ஒரு குழியில் 40 செ.மீ ஆழத்தில் சோழர் கால செப்பு நாணயம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது முதலாம் ராஜராஜன் காலத்தை சேர்ந்ததாகும். இந்த நாணயம் 23.3. மி.மீ விட்டமும், 2.5 மி.மீ தடிமனும் 3 கிராம் எடையும் கொண்டுள்ளது. நாணயத்தின் முன்பக்கத்தில் மனித உருவம் மற்றும் பின் பக்கத்தில் அமர்ந்த நிலையிலுள்ள மனித உருவமும் காணப்படுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சாதி வெறி தமிழகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறக்கூடும் பிரேமலதா விஜயகாந்த்



சென்னை, ஜூலை 4
தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருநெல்வேலியில் மாணவர்களிடையே சாதி கலவரத்தைத் தூண்டக்கூடிய அளவிற்கு ஏற்பட்ட மோதல், மிக மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற நிகழ்வு அதே பள்ளிகூடத்தில் ஏற்கனவே நிகழ்ந்ததுள்ளது. இன்றைக்கு மாணவர்களிடையே காணப்படும் சாதி மோதல் என்பது தொடர்கதையாக மாறினால், அவர்களின் எதிர்காலமும் வருங்கால சமுதாயமும் பாதிக்கூடிய வகையில் அமைய வாய்ப்பு இருக்கிறது. மாணவர்களுக்குள் எந்தப் பாகுபாடும் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான், ஒரே மாதிரியான சீருடைகள் ஏற்படுத்தப் பட்டது. ஆனால் எத்தனை மாற்றங்களைக் கொண்டு வந்தாலும், எத்தனை பாரதியார், பெரியார் வந்தாலும், சாதிகள் இல்லை என்று சொன்னாலும், இந்த சாதி வெறி என்பது. இளம் வயதிலேயே, அதுவும் பள்ளிக்கூடங்களிலிருந்து தொடங்குவது, எதிர்காலத்தமிழகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறக்கூடும். எனவே முதல்அமைச்சர் உடனடியாக இதில் கவனம் செலுத்தி இரும்பு கரம் கொண்டு தடுக்க வேண்டும் என்று தேமுதிக சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.என்றுகூறியுள்ளார்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்: எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 4
அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

வங்கக்கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களையும், அவர்தம் உடைமைகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைஅரசால்தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கதையாகஉள்ளது.கச்சத்தீவு மீட்பு ஒன்றே இதற்கான நிரந்தரத் தீர்வாக அமையும்.

கச்சத்தீவை மீட்க தொடர்ச்சியான சட்டப் போராட்டம் நடத்திய ஒரே இயக்கம் அ.தி.மு.க. என்ற அடிப்படையில், கச்சத்தீவில் தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகளை முழுமையாக மீட்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய பா.ஜனதா கூட்டணி அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் தமிழகத்தில் சாதிய மோதல்கள் தலைவிரித்தாடுகிறது: வானதி சீனிவாசன்



சென்னை, ஜூலை 4
தமிழக பா.ஜ.க எம்.எல்.ஏ வானதி சீனிவாசன் தனது எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது, திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளி மாணவர்களிடையே முற்றிய சாதிய வன்முறையானது, தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சாதியை ஒழித்து, சமூகநீதியை நிலைநாட்டுவோம் என்று ஒவ்வொரு மேடையிலும் முழங்கும் தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் தமிழகத்தில் சாதிய மோதல்கள்தலைவிரித்தாடுகிறது. குறிப்பாக, பள்ளி மாணவர்களிடையே சாதிய மோதல்கள் அதிகரித்து வருகின்றன.

கள்ளங்கபடமில்லாத பள்ளிச் சிறார்களின் மனதில் கட்டுப்படுத்த முடியாத காட்டுத்தீ போல் பரவிவரும் சாதிய மோதல்கள், உங்கள் நிர்வாகத்திறனின் இயலாமையை வெளிச்சம்போட்டுக்காட்டுகிறது.

இதுதான் நீங்கள் மார்தட்டி முழங்கி வரும் சமூக நீதியா மு.க.ஸ்டா லின், அறிவாலயம்?. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# திமுக அரசு எந்த ஒரு வளர்ச்சி பணியையும் மேற்கொள்ளவில்லை: செல்லூர் ராஜூ பேட்டி



சென்னை, ஜூலை 4
மதுரையில் இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு கூறியதாவது,

மூன்று ஆண்டுகளாகியும் திமுக அரசு எந்த ஒரு வளர்ச்சி பணியையும் மேற்கொள்ளவில்லை. தமிழகஅரசிடம்பேசி மதுரைக்கான திட்டங்களை நிறைவேற்ற அமைச்சர்கள் முன் வரவில்லை. அதிமுகவின் 10 ஆண்டு கால ஆட்சியில் கள்ளச்சாராய விற்பனை நடைபெறவில்லை. இப்போது கள்ளச்சாராய மரணங்கள் குறித்து சட்டப் பேரவையில் விவாதிக்க அனுமதி தரவில்லை. கள்ளச்சாராய மரணங்கள் குறித்து சட்டப்பேரவையில் விதி எண் 56ன் படி எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால், விதி எண் 56 ன படி மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் பேசி உள்ளார்.சட்டமும் விதிமுறைகளும் அனைவருக்கும் சமம் தானே? திமுக ஆட்சியை போதைப்பொருள் ஆட்சி எனக் கூறலாம். என்று செல்லூர் ராஜு தெரிவித்துள்ளார்,

# தமிழக மீனவர்கள் கைது: வெளியுறவுத்துறை மந்திரிக்கு அண்ணாமலை கடிதம்



சென்னை, ஜூலை 4
ராமேசுவரம் தனுஷ்கோடியை சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அதன்படி கச்சத்தீவு மற்றும் நெடுந்தீவு அருகே மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி மீனவர்கள் 25 பேரை கைது செய்தனர். மேலும் 4 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட 25 மீனவர்களும் காங்கேசன் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து அவர்களிடம் அங்கு விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேசுவரத்தைச் சேர்ந்த 25 மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு பாஜக மாநில தலைவர்அண்ணாமலை கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையினரின் தொடர் கைது நடவடிக்கைகளில் இருந்து தமிழக மீனவர்களை காப்பாற்றி கச்சத்தீவு பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும், கைதிகளை முன்கூட்டியே திருப்பி அனுப்பவும், அவர்களின் மீன்பிடி படகுகளை விடுவிக்குமாறு அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

# கள்ளத்தொடர்பை தட்டிக்கேட்ட கணவன் மீது தாக்குதல்: மனைவி, மாமியார் கைது

கள்ளக்குறிச்சி, ஜூலை 4
கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ள தொழுவந்தாங்கல் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்தவர் பிரபு (வயது 38) தொழிலாளி. இவருக்கும் அத்தியூர் அண்ணாநகர் பகுதியை சேர்ந்த சுகந்தி (வயது 30) என்பவருக்கும் திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். பிரபு வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார்.

இந்த நிலையில் சுகந்திக்கு அதே பகுதியை சேர்ந்த ஒருவருடன் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

வெளி நாட்டில் இருந்து சொந்த ஊருக்கு வந்த பிரபு இதுபற்றி தனது மனைவியிடம் தட்டிக் கேட்டார். இதனால் அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த சுகந்தி, மாமனார் செல்வம் (55), மாமியார்சுமதி(48), மைத்துனர் அறிவழகன் (23) ஆகிய 4 பேரும் சேர்ந்து பிரபுவை திட்டி, தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து பிரபுவின் தம்பி விஜயகுமார் கொடுத்த புகாரின் பேரில் சுகந்தி உள்பட 4 பேர் மீது வடபொன்பரப்பி போலீசார் வழக்குப்பதிவு செய்து சுகந்தி, சுமதி ஆகிய 2 பேரையும் கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள செல்வம், அறிவழகன் ஆகியோரை வலைவீசி தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெளியுறவுத்துறை மந்திரிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, ஜூலை 4
இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 25 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியும் மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கருக்கு, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டைச்சேர்ந்த25மீனவர்கள் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார்வளைகுடா கடல்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நிலையில், நேற்று (01.07.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசை வலியுறுத்தி முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

முதல்அமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் சமீப வாரங்களில் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளதோடு. INDTN10MO 1379 மற்றும் INDTN09MO2327 என்ற பதிவெண்களைக் கொண்ட இரண்டு மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளிலும், இரண்டு பதிவு செய்யப்படாத மீன்பிடிப் படகுகளிலும் சென்ற தமிழ்நாட்டைச்சேர்ந்த25மீனவர்கள் 172024 அன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1974ம்ஆண்டிலிருந்தே அப்போதைய மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை நிலவுவதாக மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் தனது 2762024 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கோடிட்டுக் காட்டியுள்ள முதல்அமைச்சர், தி.மு.க. தலைமையிலான மாநில அரசு கச்சத்தீவு ஒப்பந்தத்தை அப்போது முழு வீச்சில் எதிர்த்தது என்பதையும், தனது எதிர்ப்பை தமிழ்நாடு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் எதிரொலித்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு இது சம்பந்தமாக மாநில அரசுடன் முறையாக கலந்தாலோசிக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று என்று குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர், இந்திய மீனவர்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையிலும், அவற்றைப் பறிக்கும் வகையிலும் கச்சத்தீவை முழுமையாக இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது அப்போதைய மத்திய அரசுதான் என்று தனது கடிதத்தில் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது தலைவரும், அப்போதைய தி.மு.க. தலைவருமான கலைஞர், சுப்ரீம்கோர்ட்டில் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்து, அதில் "மத்திய அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்கு முரணானதாக இருக்கும் போது. கச்சத்தீவின் இறையாண்மை ஒரு தீர்க்கப்பட்ட விஷயம் என்று கூற முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறியிருந்ததை முதல்அமைச்சர் தனது கடிதத்தில் நினைவுகூர்ந்துள்ளார். பா.ஜ.க. தலைமையிலான அரசு தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியில் இருந்தாலும், இந்தப் பிரச்சினையை தேர்தல் நேர முழக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருவதாகவும், கச்சத்தீவை மீட்க குறிப்பிடத்தக்க அர்த்தமுள்ள எந்த முயற்சியையும் அது எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதல்அமைச்சர், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகும் எனத் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் மீனவர்களுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தேவையான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கரிடம், முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு பஸ்களில் திடீர் கட்டண உயர்வு



திருச்செந்தூர், ஜூலை 4
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் உலக புகழ் பெற்ற முக்கிய ஆன்மிக தலமாக விளங்குகிறது. இக்கோவிலுக்கு தினமும் பல்வேறு ஊர்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். மேலும் ஒவ்வொரு விடுமுறை நாட்கள், திருவிழாகாலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

மேலும், கொரோனா காலத்திற்கு பிறகு திருச்செந்தூர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை பலமடங்கு அதிகரித்துள்ளது. முன்பு திருவிழா காலங்கள், சனி, ஞாயிறு கிழமைகளில் ஓரளவு பக்தர்கள் கூட்டம் இருக்கும். ஆனால் தற்போது தினமும் இரவு, பகல் எந்நேரமும் பக்தர்கள் கூட்டம் கோவில், கடற்கரை பகுதிகளில் அலைமோதுகிறது.

அதேபோல் திருச்செந்தூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள வியாபாரிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் திருச்செந்தூர் நெல்லை மார்க்க பஸ்களில் தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். நெல்லை திருச்செந்தூர் இடையே போதிய ரெயில் வசதி இல்லாததால், வெளியூர் பக்தர்கள் தினமும் நெல்லை மார்க்கமாக திருச்செந்தூருக்கு பஸ்களில் அதிகளவில் சென்று வருகின்றனர்.

இந்நிலையில் திருச்செந்தூர் நெல்லை இடையே அரசு பஸ்களில், அரசு நிர்ணயித்த டிக்கெட் கட்டணமான ரூ.50 ல் இருந்து திடீரென ரூ.56 ஆக உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. இந்த திடீர் கட்டண உயர்வு குறித்து அரசு போக்குவரத்து கழகம் சார்பிலோ, அரசு சார்பிலோ எவ்வித அறிவிப்பும் வெளியாகவில்லை. ஆனால், அரசு பஸ்களில் சப்தமின்றி இந்த கட்டண வசூல் நடக்கிறது. இது கோவிலுக்கு வரும் பக்தர்கள், வியாபாரிகள், பாமர மக்கள் அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கண்டக்டர்கள் கூறுகையில், அதிகாரிகள் கூறுவதை கேட்டு நாங்கள் பணியாற்றுகிறோம். பயணிகள் கேட்டால் பைபாஸ் ரைடர் என்று கூறி டிக்கெட் கட்டணத்தை உயர்த்தி வசூலிக்குமாறு கூறுகின்றனர். இதில் எங்களுக்கு உடன்பாடு உண்டா? இல்லையா? அரசு அனுமதி பெறப்பட்டுள்ளதா? என்பது குறித்து நாங்கள் கருத்து கூறமுடியாது என மறுத்து விடுகின்றனர். இதனால் பஸ்களில் கட்டண உயர்வு குறித்து சில பயணிகளுக்கும், கண்டக்டர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்படுகிறது.

இது குறித்து திருச்செந்தூர் அரசு போக்குவரத்துக் கழக கிளை மேலாளர் கூறுகையில்,

திருச்செந்தூர் நெல்லை இடையே 'பிபிஆர்' என்று குறிப்பிடப்பட்டு சில பஸ்களில் மட்டும் டிக்கெட் கட்டணத்தை உயர்த்தி ரூ.56 ஆக வசூலித்து வருகிறோம். இந்த பஸ்கள் குறிப்பிட்ட ஸ்டாப்களில் மட்டும் நின்று செல்லும். அந்த பஸ்களில் மட்டும் திருச்செந்தூர் நெல்லை செல்வதற்கும், வருவதற்கும் கட்டணம் ரூ.56 என வசூலிக்கப்படுகிறது. மற்ற பஸ்களில் வழக்கம் போல் ரூ.50 கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இது கடந்த 2 மாத காலமாக நடைமுறையில் உள்ளது, என்று கூறினார்.

ஏற்கனவே திருவிழா நாட்களில் சிறப்பு பஸ்கள் என்ற பெயரில் ரூ.5 கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படுவது வாடிக்கையாக நடக்கிறது. இந்த நிலையில் நெல்லைதிருச்செந்தூர் இடையே பைபாஸ் சாலை வசதி இல்லாத நிலையில், ஒரே நேர கால அவகாசத்தில் இயக்கப்படும் பெரும்பாலான அரசு பஸ்களில் திடீரென எந்த அடிப்படையில் ரூ.6 கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்படுவது பக்தர்கள், சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

# விதி மீறல்கள், நம்பர் பிளேட்டுகளில் ஸ்டிக்கர்: தமிழ்நாடு காவல்துறைக்கு சென்னை ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவு



சென்னை, ஜூலை 4
சென்னை நகரில் தனியார்வாகனங்களில்காவல் துறை, அரசு, ஊடகம், வழக்கறிஞர் என ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது எனவும், மீறினால் அபராதம் விதிக்கப்படும் எனவும் சென்னை போக்குவரத்து காவல் துறை உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை தமிழகம் முழுவதும் அமல்படுத்த உத்தரவிடக் கோரி சென்னையைச் சேர்ந்த தேவதாஸ் காந்தி வில்சன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபீக் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, சென்னை மாநகர காவல் ஆணையர் சார்பில் போக்குவரத்து கூடுதல் ஆணையர் சுதாகர் தாக்கல் செய்த அறிக்கையில், வாகனங்களில் தடை செய்யப்பட்ட "சன் கன்ட்ரோல் பிலிம்" ஒட்டப்படுவதை தடுப்பதற்கும் அதனை கண்காணிக்கவும் குழு அமைக்கப்பட்டுள்ளது. விதிகளை மீறி இது போன்ற ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுவோர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தனியார் வாகனங்களில் மத்திய, மாநில அரசுகளின் சின்னங்களை ஒட்டுபவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த மே மாதம் வரை சென்னை மாநகரில் சன் கன்ட்ரோல் பிலிம் பயன்படுத்தியதாக 6 ஆயிரத்து 279 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலமாக 31 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டது.

அதே போன்று போக்குவரத்து விதி மீறல்கள், நம்பர் பிளேட்டுகளில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது தொடர்பாக 51, 414 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 2 கோடி 57 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் 18 ஆயிரம் வழக்குகளில் தொடர்புடையவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து விதிமீறல்கள் மீது உடனடியாக சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தனியார் வாகனங்களின் நம்பர் பிளேட்களில் போலீஸ், வழக்கறிஞர், ஊடகம் என ஸ்டிக்கர்கள் ஒட்ட தடை விதித்த உத்தரவை அமல்படுத்தியது குறித்து இரு வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்ய தமிழ்நாடு காவல்துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை இரு வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.


Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
4.7.2024

## 'கருடன்' திரைப்படம் ஓடிடியில் வெளியாகும் தேதி அறிவிப்பு



எதிர்நீச்சல்', 'காக்கிச்சட்டை', 'கொடி', 'பட்டாசு' படங்களை இயக்கிய துரை செந்தில்குமார் இயக்கத்தில் சூரி நடித்துள்ள படம் 'கருடன்'. இப்படத்தில் சசிகுமார், உன்னி முகுந்தன், ஷிவதா, ரோஷினி ஹரிபிரியன், சமுத்திரக்கனி, மைம் கோபி, ஆர்.வி.உதயகுமார், வடிவுக்கரசி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். கடந்த மே 31ம் தேதி திரையரங்குகளில் வெளியான இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. குறிப்பாக படத்தில் சூரியின் நடிப்பு பாராட்டப்பட்டது. வெற்றிமாறன் கதை எழுதியுள்ளார். இப்படம் வசூல் ரீதியாக வெற்றிப் பெற்றதுடன், நல்ல விமர்சனத்தையும் பெற்றது. .இந்நிலையில், 'கருடன்' திரைப்படம் நாளை அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், படத்தை சிம்ப்ளி சவுத் (Simply South) ஓடிடி தளத்திலும் காண முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

## 'நயன்தாராவை அந்த படத்தில் நடிக்க வைத்திருக்கக்கூடாது' 'குபேரா' பட இயக்குனர்



தெலுங்கு சினிமாவில் முன்னணி இயக்குனர்களில் ஒருவர் சேகர் கம்முலா. இவர் இயக்கத்தில் கடந்த 2014ம் ஆண்டு தமிழ் மற்றும் தெலுங்கில் வெளியான படம் 'நீ எங்கே என் அன்பே'(அனாமிகா). இதுதான் அவர் தமிழில் இயக்கிய முதல் படமாகும். இதில், நயன்தாரா, பசுபதி, ஹர்ஷவர்தன் ராணே மற்றும் வைபவ் உள்ளிட்டோர் நடித்தனர்.

நடிகை நயன்தாரா இந்த படத்தில் ஹீரோயினாக நடித்திருந்தார். எனினும் இப்படம் போதிய வரவேற்பைப் பெறவில்லை. சமீபத்திய பேட்டியில் இப்படம் குறித்து சேகர் கம்முலா கூறுகையில்,

'அனாமிகா படத்தை இயக்க வேண்டாம் என்று முதலில் நினைத்தேன். பின்னர், பெண்களை மையமாக கொண்ட படத்தை இயக்க வேண்டும் என்று விரும்பியதால் இதனை இயக்கினேன்.

அந்த நேரத்தில் தனக்கு நல்ல கதை இல்லாததால், பாலிவுட் படத்தை ரீமேக் செய்ய முடிவு செய்தேன். இதனால், இப்படத்தில் நயன்தாரா போன்ற முன்னணி நடிகை நடித்தால் நல்ல வரவேற்பை பெறும் என நம்பினேன். ஆனால் இப்படம் சரியாக அமையவில்லை. இந்த படத்தில் நயன்தாராவை நடிக்க வைத்திருக்கக்கூடாது. அவரை தேர்ந்தெடுத்தது தவறான முடிவு, என்றார்.

இந்த படம், இந்தியில் வித்யா பாலன் நடிப்பில் வெளியான 'கஹானி' படத்தின் ரீமேக் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது சேகர் கம்முலா, தனுஷ் நடிக்கும் 'குபேரா' படத்தை இயக்கி வருகிறார்.



## ஓ.டி.டி.யில் வெளியாகும் 'மகாராஜா'

விஜய் சேதுபதி நடிப்பில் திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்று வரும் திரைப்படம் மகாராஜா. இத்திரைப்படம் விஜய் சேதுபதியின் 50 வது படமாகும். குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இத்திரைப்படத்தை இயக்கி இருக்கிறார். சுதன் சுந்தரம், ஜெகதீஷ் பழனிசாமி ஆகியோர் இணைந்து இப்படத்தை தயாரித்து இருக்கின்றனர். அஜனீஷ் லோக்நாத் இப்படத்திற்கு இசை அமைத்துள்ளார். இந்தபடத்தில், விஜய் சேதுபதியுடன் பாரதிராஜா, அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், அபிராமி, நட்டி நட்ராஜ் உள்பட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இத்திரைப்படம் கடந்த ஜூன் 14ம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களின் மத்தியில் ஏகபோக வரவேற்பு பெற்றது. இந்தநிலையில், மகாராஜா திரைப்படம் உலகளவில் ரூ. 100 கோடி வசூல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மகாராஜா படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் குறித்த தகவல் வெளியாகி உள்ளது. திரையரங்குகளில் பிளாக்பஸ்டர் ஹிட் அடித்த விஜய் சேதுபதியின் மகாராஜா திரைப்படம் வரும் 19ம் தேதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

## ஓ.டி.டி.யில் வெளியான 'சீதா ராமம்' பட நடிகரின் 'அஹம் ரீபூட்'



மறைந்த பழம்பெரும் நடிகர் அக்கினேனி நாகேஸ்வர ராவின் பேரன் சுமந்த். இவர் முன்னதாக துல்கர் சல்மான் நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய வெற்றிப்பெற்ற 'சீதா ராமம்' படத்தில் நடித்துள்ளார். தற்போது இவர் 'அஹம் ரீபூட்' என்ற திரில்லர் படத்தில் நடித்துள்ளார். இந்த படத்திற்கு புதுமுக இயக்குனர் பிரசாந்த் சாகர் அட்லூரி கதை எழுதி இயக்கியுள்ளார்.

மேலும், ஸ்ரீராம் மதுரி இசையமைக்கும் இப்படத்திற்கு வருண் அங்கர்லா ஒளிப்பதிவு செய்துள்ளார். வாயுபுத்ரா என்டர்டெயின்மெண்ட்ஸ் மற்றும் எஸ் ஒரிஜினல்சின் கீழ் ரகுவீர் கோரிபார்த்தி மற்றும் ஸ்ருஜன் யாரபோலு இணைந்து இப்படத்தினை தயாரித்துள்ளனர். திரில்லர் படமான 'அஹம் ரீபூட்' திரையரங்குகளில் வெளியிடப்படவில்லை. இது நேரடியாக 'ஆஹா' என்ற ஓடிடி தளத்தில் கடந்த 1ம் தேதி வெளியாகியுள்ளது. இந்தப்படம் ரசிகர் மத்தியில் நல்ல வரவேற்ப்பை பெற்று வருகிறது. போதைப்பொருள் கடத்தல்காரன் என்று குற்றம் சாட்டப்பட்ட ஒரு கதாநாயகனைச் சுற்றி நடக்கும் கதையை மையமாக கொண்டு எடுக்கப்பட்ட படமாக இருக்கிறது.

## எஸ்எஸ்எம்பி29': மகேஷ் பாபுவுக்கு வில்லனாகும் மலையாள நடிகர்?




தெலுங்கு திரையுலகின் முன்னணி இயக்குனர் ராஜமவுலி. இவர் இயக்கத்தில் வெளியான ஆர்.ஆர்.ஆர். திரைப்படம் மாபெரும் வரவேற்பை பெற்று படத்தின் பாடலுக்காக ஆஸ்கர் விருதையும் வென்றது. இதைத்தொடர்ந்து ராஜமவுலி அடுத்ததாக நடிகர் மகேஷ் பாபுவை வைத்து 'எஸ்எஸ்எம்பி29' படத்தை இயக்கவுள்ளார்.

இப்படத்தில் நடிப்பதற்காக நடிகர் மகேஷ் பாபு தனது தோற்றத்தை மாற்றி வருகிறார். மேலும், இப்படத்திற்கு பிரபல இசையமைப்பாளர் எம்.எம்.கீரவாணி இசையமைக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த படம் ஆக்சன், அட்வென்ச்சர் ஜானரில் இருக்கும் என்றும் இந்த படத்தின் கதை உலகம் முழுவதும் வெவ்வேறு இடங்களில் நடப்பதாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் ராஜமவுலி தெரிவித்திருந்தார்.

தற்போது, இப்படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகளை தேர்ந்தெடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் ஒன்று வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் மகேஷ் பாபுவுக்கு வில்லனாக நடிக்க பிரபல மலையாள நடிகர் பிருத்விராஜிடம் படக்குழு பேசி வருவதாக கூறப்படுகிறது. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரபாஸ் பெயரை பச்சை குத்திய 'கல்கி 2898 ஏடி' பட நடிகை?




பாலிவுட்டில் பிசியான நாயகியாக வலம் வருபவர் திஷா பதானி. தமிழில் சூர்யாவின் 'கங்குவா' மூலமாக அறிமுகமாக இருக்கிறார். அதனைத்தொடர்ந்து, நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ், அமிதாப்பச்சன், கமல்ஹாசன் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி இருக்கும் 'கல்கி ஏடி 2898' படத்திலும் நடித்துள்ளார். 'வெல்கம் டு தி ஜங்கிள்' என்ற இந்தி படத்திலும் நடித்து வருகிறார்.

சமீபகாலமாக திஷா பதானியும் நடிகர் பிரபாசும் காதலிப்பதாக வதந்திகள் பரவி வருகின்றன. மேலும், இருவரும் டேட்டிங் செய்வதாகவும் இணையத்தில் தகவல் பரவி வருகிறது. இந்நிலையில், திஷா பதானி பச்சை குத்தியிருப்பது இந்த தகவல்களை மேலும் வலுப்படுத்தியுள்ளதாக கூறலாம்.

நடிகை திஷா பதானி தனது கையில் 'பிடி' ('PD') என்று ஆங்கிலத்தில் பச்சைகுத்தியுள்ள புகைப்படத்தை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதனை கண்ட ரசிகர்கள் 'பி' என்பது பிரபாஸ் என்றும் 'டி' என்பது திஷா என்றும் கருத்து பதிவிட்டுள்ளனர். மேலும், சிலர் திஷா பதானி என்பதைதான் அவ்வாறு பச்சை குத்தியுள்ளார் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர்.

## விம்பிள்டன் டென்னிஸ்: 2வது சுற்றுக்கு முன்னேறினார் ஸ்வெரேவ்



டென்னிஸ் போட்டியில் ஆண்டுதோறும் 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற டென்னிஸ் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் மிகவும் கவுரவமிக்கதாக கருதப்படும் நூற்றாண்டு காலம் பழமையான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று தொடங்கியது.

இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஸ்பெயின் வீரர் ராபர்டோ கார்பலேஸ் ஜெர்மனி வீரர் ஸ்வெரேவ் ஆகியோர் மோதினர். பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஸ்வெரேவ் 62,64,62 என்ற செட் கணக்கில் ராபர்டோவை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

## நேபாளம் கூட பாபர் அசாமை அணியில் சேர்க்காது சோயப் மாலிக்



அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீஸில் நடைபெற்று முடிந்த டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி, தென் ஆப்பிரிக்க அணியை 7 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 2வது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது. இதனையடுத்து இந்திய அணிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகிறது.

அதேசமயம் இந்த தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் என கணிக்கப்பட்ட அணிகளில் ஒன்றான பாபர் அசாம் தலைமையிலான பாகிஸ்தான் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணி மீதும் அந்த அணி கேப்டன் பாபர் அசாம் மீதும் கடுமையான விமர்சங்கள் எழுந்து வருகின்றன. இந்நிலையில் டி20 கிரிக்கெட்டை பொறுத்தவரையில் நேபாளம் அணி கூட அவர்களது பிளேயிங் லெவனில் பாபர் அசாமை சேர்க்காது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் சோயப் மாலிக் கூறியுள்ளார் இது குறித்து அவர் கூறியதாவது, எங்கள் அணியின் சிறந்த வீரர் யார்? என கேட்டால், பாபர் அசாம் என்று தான் கூறுவோம். ஆனால் குறிப்பிட்ட வடிவத்தில் நான் முதல் 45 அணிகளைப் பற்றி பேசுகிறேன். ஏனெனில் அந்த அணிகளின் விளையாடும் லெவனில் பாபர் அசாமுக்கு இடம் இருக்குமா?. அதிலும் டி20 வடிவத்தில் ஆஸ்திரேலியா, இந்தியா அல்லது இங்கிலாந்து அணியின் பிளேயிங் லெவனில் பாபர் அசாம் இருப்பாரா? என்று கேட்டால் என்னுடைய பதில் இல்லை என்பது மட்டும் தான். என்னைக்கேட்டால் டி20 கிரிக்கெட்டை பொறுத்தவரையில் நேபாளம் அணி கூட அவர்களது பிளேயிங் லெவனில் பாபர் அசாமை சேர்க்காது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா தோல்வி அடைந்ததை கண்டு இரவு முழுவதும் அழுதேன் கவுதம் கம்பீர்




நடந்து முடிந்த டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் இந்திய அணி 7 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இந்த உலகக்கோப்பை தொடருடன் ராகுல் டிராவிட்டின் பதவி காலம் நிறைவு பெற்றது. இதையடுத்து இந்திய அணியின் பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்நிலையில் 1992ம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஒரு ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததை பார்த்து அன்று இரவு முழுவதும் அழுததாக கவுதம் கம்பீர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, அந்த ஒரு போட்டியை பார்த்து நான் இந்தியாவுக்காக உலகக் கோப்பையை வெல்ல வேண்டும் என்று விரும்பினேன். 1992ம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக பிரிஸ்பேனில் நடைபெற்ற போட்டி எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. இந்திய அணி ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. உண்மையில் நான் அன்று இரவு முழுவதும் அழுதேன். அதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ நான் அப்படி எதற்குமே அழுதது கிடையாது.

அப்போது எனக்கு 11 வயது நான் இரவு முழுவதும் அழுதேன் என்று சொன்னேன். நான் அப்பொழுதுதான் இந்தியாவுக்காக உலகக்கோப்பையை வெல்ல வேண்டும் என்று விரும்பினேன். 1992ல் முடிவு செய்து 2011ஆம் ஆண்டு நிறைவேற்றினேன். அந்த போட்டிக்கு முன்னும் பின்னும் நான் மகிழ்ச்சியற்றவனாக உணர்ந்திருப்பேன். ஆனால் அப்படி அழுததில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## குட்டி தூக்கம் போட்ட வீரர்... இந்தியாவுக்கு எதிரான ஆட்டம் மிஸ்சிங்; வெளியான சுவாரஸ்ய தகவல்



வங்காளதேச கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமது. டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின்போது, இந்திய அணிக்கு எதிரான போட்டியில் அவர் விளையாட இருந்தது. எனினும், கடைசி நேரத்தில் பிளேயிங் லெவன் வீரர்களின் பட்டியலில் அவர் இல்லை. இதனால், அவர் போட்டியில் விளையாடவில்லை.


இதனால், ஹசன் சாகிப் மற்றும் முஸ்தாபிசுர் ரகுமான் என்ற 2 வேகப்பந்து வீச்சாளர்களுடன் வங்காளதேச அணி போட்டியை எதிர்கொண்டது. தஷ்கின் போட்டியில் விளையாடாமல் போனது ரசிகர்களுக்கும், கிரிக்கெட் நிபுணர்களுக்கும் பெரும் ஆச்சரியம் ஏற்படுத்தியது. ஆனால், அதற்கு அடுத்து நடந்த ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் அவர் பங்கேற்றார். இது பெரிய சர்ச்சையையும் ஏற்படுத்தியது. இந்நிலையில், அவர் போட்டியில் விளையாடாமல் போனதற்கான காரணம் தெரிய வந்துள்ளது. தஷ்கின் அறையில் படுத்து தூங்கி இருக்கிறார். ஆனால், போட்டிக்காக விளையாட எழுந்து வராமல் நீண்ட நேரம் தூக்கத்திலேயே இருந்துள்ளார். இதனால், அணி வீரர்களுக்காக தயாராக இருந்த பஸ்சில் அவர் ஏறவில்லை. சரியான நேரத்திற்கு வராத சூழலில் போட்டியிலும் பங்கேற்கவில்லை. அவரை அணி நிர்வாகமும் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால், அணிக்கான ஓட்டலிலேயே, அணியின் அதிகாரி ஒருவர் தங்க நேர்ந்தது.

இதன்பின்னர் அகமது, பஸ்சை தவற விட்டதற்காக சக வீரர்களிடம் மன்னிப்பும் கேட்டிருக்கிறார். எனினும் அவரை இந்திய அணிக்கு எதிரான போட்டியில், விளையாட வைக்க வேண்டாம் என்று அணியின் பயிற்சியாளர் முடிவு செய்திருக்கிறார்.


இதுபற்றி அணியின் அதிகாரி ஒருவர் கூறும்போது, அணியில் விளையாடாதது பற்றி தலைமை பயிற்சியாளரான சண்டிகா ஹதுருசிங்காவே பதிலளிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இதனை ஒரு பெரிய விசயம் ஆக்க வேண்டிய தேவையில்லை. அவருக்கும், பயிற்சியாளருக்கும் எந்த விவகாரமும் இல்லை. அப்படி இருந்திருக்கும் என்றால், ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான அடுத்த போட்டியில் அவர் எப்படி விளையாடியிருக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால், உலகக்கோப்பை கிரிக்கெட் போன்ற முக்கிய போட்டியில் அசதியிலோ அல்லது வேறு காரணத்தினாலோ குட்டி தூக்கம் போட்டு ஓட்டல் அறையிலேயே மூத்த வீரர் ஒருவர் படுத்து கொண்டு, விளையாடாமல் போன விவகாரம் கிரிக்கெட் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

## விம்பிள்டன் டென்னிஸ்: 2வது சுற்றுக்கு முன்னேறினார் ஜெசிகா பெகுலா



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று தொடங்கியது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, சகநாட்டவரான ஆஷ்லின் க்ரூகர் உடன் மோதினார். அனுபவ வீராங்கனையான ஜெசிகா பெகுலா இந்த மோதலில் 62, 60 என்ற நேர் செட் கணக்கில் ஆஷ்லின் க்ரூகரை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.



**சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில**
**நீர்மை யுடையார் சொலின்**

**விளக்கம்:**

**பயனில்லாத சொற்களை நல்ல பண்பு உடையவர் சொல்லுவாரானால், அவனுடைய மேம்பாடு அவர்க்குரிய மதிப்போடு நீங்கிவிடும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.